OPEN ACCESS

Volume: 5

Issue: 2

Month: October

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 10.07.2020

Accepted: 20.08.2020

Published: 01.10.2020

Citation:
Kayalvizhy, M. (2020). Puzzle of Tamil Society – Right and Left Hand Sects. *Shanlax International Journal of Tamil Research,* *5*(2), 38–45.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i2.3483

*Corresponding Author:
kayalarul22@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Puzzle of Tamil Society – Right and Left Hand Sects

**M. Kayalvizhy**
*Assistant Professor, Department of Tamil*
*Pachiyappas College for Women, Kancheepuram. Tamil Nadu, India*

**Abstract -** The right hand and left and sect was a peculiar system prevailed in the Medieval period of Tamil Nadu. This system consists 98 castes in the two sects. This system dominated the Tamil society for hundreds of years. It is believed that Karikala Chola established this system. In course of time many clashes arrived between them and it ends with death. Due to this system society diverted in to two. The Tamil kings gave full support to this system. In the beginning of 19th century this system disappeared suddenly from Tamil society. Nobody came to a conclusion that why this system appeared and disappeared in our society.

**Keywords:** Tamilnadu History, Chola Dynasty, Caste System, Tamil Society, Karikala Chola, Sub Castes, Clashes, Death, Development, Disappeared

Referenes

1. Pillai, K.K. (1969), A Social History of The Tamils, University of Madras, Chennai.
2. Swaminathan. A, (1991), Social and Cultural History of Tamil Nadu, Deepa Publications, Chennai
3. Neelakanta Sastri. K.A. (1935), The Cholas, University of Madras, Chennai.
4. Pillai. K.K, (2013), History of Tamil Nadu-People And Culture, International Institute of Tamil Research, Chennai.
5. Balasubramanyam. M, (1978), Political and Cultural History of Cholas, Tamil Nadu Text Book Society, Chennai.
6. Neelakanta Sastri. K.A. (1979), History of South India, Tamil Nadu Text Book Society, Chennai.
7. Sowndra Pandiyan. S, (1995), History of Left and Right Hand People, Tamil Nadu Archaeological Department Publication, Chennai.
8. Vanamamalai. N, (1999), The Concept of Community and Social Conflict in Tamil Nadu, People Publication, Chennai.

# தமிழ்ச் சமுதாயத்தின் புதிர்–வலங்கை இடங்கைப் பிரிவுகள்

*மு. கயல்விழி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்

***ஆய்வுச் சுருக்கம் –*** *வலங்கை இடங்கைப் பிரிவு என்பது இடைக்காலத் தமிழகத்தில் நிலவிய விந்தையான அமைப்பு முறையாகும். இது சாதி முறையைச் சார்ந்ததாகும். இவ்விருபிரிவிலும் 98 சாதிகள் இடம் பெற்றிருந்தன. இவ்வமைப்பு முறையானது பல நூற்றாண்டுக்காலம் தமிழ்ச் சமுதாயத்தை ஆட்டிப்படைத்தது. வலங்கை இடங்கை முறையைக் கரிகால சோழனே தோற்றுவித்தான் என்று ஆய்வாளர் கருதுவர். இவ்வமைப்பு முறை காலப்போக்கில் தமிழ்ச் சமுதாயத்தை இரண்டாகப் பிளந்து பெரும்மோதலுக்கு வழிவகுத்தது. தமிழ் மன்னர்கள் இம்முறையைத் தடையில்லாமல் ஆதரித்து வளர்த்தனர். யாரும் எதிர்பாராதவண்ணம் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இம்முறை திடீரென்று மறைந்து போனது. இதன் தோற்றம் போலவே இதன் மறைவும் இன்னமும் புரியாத புதிராக உள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழக வரலாறு, சோழப் பேரரசு, சாதிய அமைப்பு, தமிழ்ச் சமுதாயம், கரிகால சோழன், வளர்ச்சி, அரசர்கள் ஆதரவு, மோதல்கள், திடீர்மறைவு*

## முன்னுரை

ஒரு நாட்டின் நிலை அந்நாட்டின் சமுதாயத்தைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகின்றது. சமூகம் என்பது மனிதர்களின் ஒட்டுமொத்தத் தொகுப்பாகும். அந்தச் சமூகத்தின் செயல்பாடுகளுக்கு ஏற்பவே அந்நாட்டின் நிலைமையும் அமையும். ஒவ்வொரு நாட்டின் சமூகத்திற்கென்று அடிப்படையான ஏது அல்லது பொருண்மை உள்ளது. அந்தவகையில் தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படை ஏதுவாகச் சாதிமுறை திகழ்ந்தது. சாதிமுறையே தமிழ்ச் சமுதாயத்தின் அடிப்படையாகவும் ஆணிவேராகவும் திகழ்ந்தது. இதன் காரணத்தால் இம்முறையை அரசர் முதல் ஆண்டிவரை ஆதரித்துவந்தனர். இந்தச் சாதி முறையின் முதிர்வு பெற்ற வடிவமே வலங்கை இலங்கைப் பிரிவாகும். ஏறத்தாழப் பன்னிரெண்டாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை தமிழ்ச் சமுதாயத்தில் அசைக்கவியலாத சக்தியாகத் திகழ்ந்த இந்தச் சாதிமுறையைப் பற்றி இந்தத் தலைமுறையினர் சிறிதும் அறியமாட்டார்கள். தமிழ்ச் சமுதாயத்தையே ஆட்டிப்படைத்த வலங்கை இடங்கைப் பிரிவின் தோற்றமும் மறைவும் மாபெரும் புதிராய் உள்ளது. தமிழக வரலாற்றில் களப்பிரர்களின் காலம் போன்றே இதுவும் தெளிவுபெறாத மற்றும் விளக்கங்கள் கிடைக்காத சிக்கலாய் ஆய்வாளர்கள் மத்தியில் உள்ளது. தமிழ்ச் சமூகக்தின் புதிராக விளங்கிய வலங்கை இடங்கைப் பிரிவினரைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## வலங்கை இடங்கைப் பிரிவினரின் தோற்றம்

வலங்கை இடங்கைப் பிரிவினரின் தோற்றம் குறித்துத் தெளிவான கருத்து ஏதும் இதுவரை தெரிந்திலது. ஆய்வாளர்களும் ஒருமித்த முடிவு எட்ட இயலவில்லை. அது எப்பொழுது, யாரால், எவ்விடத்தில்,

எந்நிலையில் தோன்றியது என்று துல்லியமாய்க் கணிக்க இயலவில்லை. சங்க காலத்திலும் அதன்பின் வந்த பல்லவர் காலத்திலும் தமிழகத்தில் இவ்வமைப்பு முறை காணப்படவில்லை. அதன்பின் 12 ஆம் நூற்றாண்டு அளவில் இம்முறை பற்றி முதன்முதலாய்த் தெரியவருகின்றது. இவ்வமைப்புப் பற்றி பல்வேறு கருத்துகள் உரைக்கப்படுகின்றன. வடஇந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து வந்த அந்தணர்கள் தமிழ்ச் சமுதாயத்தில் பெற்ற அபரிமிதமான செல்வாக்கு பிற இனத்தவரைச் சிந்திக்க வைத்தது. எனவே தம் இனத்தையும் தம் உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ளவேண்டி இவர்கள் உருவாக்கியகூட்டமைப்பே இந்தவலங்கை, இடங்கைப்பிரிவு என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (வானமாமலை.நா.ப:35). இம்முறையானது இடைக்காலத்தில் காணப்பட்ட வருணாசிரம தருமத்திற்கு எதிரானது என்றும் கருதப்படுகின்றது.

இவ்வமைப்பில் தொழில் சார்ந்த இனத்தவர்கள் ஒரு பிரிவாகவும் விவசாயம் சார்ந்தவர்கள் இன்னொரு பிரிவாகவும் பிரிந்தனர். விவசாயக் குடியினர் வலங்கைப் பிரிவிலும் தொழிலாளர் பிரிவினர் இடங்கைப் பிரிவிலும் சேர்க்கப்பட்டனர். பொருளாதாரப் பின்புலம் வாய்ந்த இடங்கைப் பிரிவினரே சமுதாயத்தில் செல்வாக்கு மிக்கவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வமைப்பு முறை பற்றி சோழர்களின் பூர்வீகப்பட்டயம் கரிகால சோழனே இவ்வமைப்பை உருவாக்கினான் என்று உரைக்கின்றது (பிள்ளை. கே. கே. ப: 322). மேலும் வலங்கை இடங்கைப் பிரிவின் வரலாறு என்ற ஓலைச்சுவடி பலவிதக் கட்டுக்கதையை எடுத்தியம்புகின்றது. சோழர் பூர்வீகப் பட்டயம்,

கலியுகம் 1446 இல் இவ்வாறு வருணமும் நான்கு சாதிகளாகப் பிரிந்திருந்தன. இந்நான்கு சாதிகளில் 24 உட்பிரிவுகள் இருந்தன. இவ்வாறு 96 சாதிகள் இதில் இணைக்கப்பட்டன. இவற்றுடன் பிற இரு சாதியரும் சேர்ந்து 98 சாதிகள் இப்பிரிவில் காணப்பட்டன (ARE.No:464/1911). என்று உரைக்கின்றது. இம்முறையின் தோற்றம் குறித்துப் பல்வேறு புராணக்கதைகளும் கூறப்படுகின்றன. காசியப முனிவரின் வேள்வியைக் காக்க அக்கினி குண்டத்திலிருந்து வலங்கை இடங்கைப் பிரிவினர் தோன்றினர் என்றும் சோழன் அரிந்தமன் தன் நாட்டில் அவர்களைக் குடியேற்றினான் என்றும் உரைக்கப்படுகின்றது (ARE.No:489/1912). மேலும் அவன் அந்தர் வேதி என்னும் பகுதியிலிருந்து அந்தணர்களை வரவழைத்து அவர்களுடன் வலங்கை, இடங்கை பிரிவினரையும் இணைத்துக் குடை முதலிய சிறப்புகள் வழங்கித் தன் நாட்டில் குடியேற்றினான்என்றுஒருகதைஉரைக்கப்படுகின்றது. (Neelakanta Sastri. K.A. P:551) இது முழுவதும் கற்பனையான கட்டுக்கதையாகும். மேலும் இம்முறையை முதன்முதலாகக் கரிகாலன் (கி.பி.2 ஆம் நூற்றாண்டு) தோற்றுவித்தான் என்று பட்டயங்கள் கூறுவதால் சில ஆய்வாளர்கள் சங்கக்காலத்துக் கரிகாலனே இம்முறையைத் தோற்றுவித்தான் என்று கருதினர் (Swaminathan.A.P:141). ஆனால் சங்க கால கரிகாலன் குறித்த கல் வெட்டு எதுவும் இதுவரை கிடைக்கப்பெறாத காரணத்தால் பிற்காலச் சோழ மன்னர்களில் கரிகாலன் என்ற சிறப்புப் பட்டப் பெயர் பூண்டவர்களே இதனைத் தோற்றுவித்திருக்கக்கூடும் என்பது தெளிவு.

சோழ மன்னர்கள் வீர இராஜேந்திரனுக்கும் (கி.பி. 1063-1070) மூன்றாம் குலோத்துங்கனுக்கும் (கி.பி.1178-1228) கரிகாலன் என்ற சிறப்புப் பெயர் உண்டு. வீரஇராசேந்திரனைப் பற்றி அதிகச் செய்திகள் கிடைக்காததாலும், மூன்றாம் குலோத்துங்கனின் நாற்பத்து மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டு அவனைக்

கரிகாலன் என்று தெளிவாக உரைப்பதாலும் அம்மன்னனே வலங்கை இடங்கைப் பிரிவைத் தோற்றுவித்திருகூடும் என்று அறியலாகின்றது (ARE.No:106/1923). இம்மன்னன் வழக்குரைக்கும்போது இடது பக்கம் நின்று வழக்குரைத்தவர்கள் இடங்கைப் பிரிவினர் என்றும் வலது பக்கம் நின்று வழக்குரைத்தவர்கள் வலங்கைப் பிரிவினர் என்றும் செவிவழிச் செய்தி ஒன்று உண்டு. சில ஆய்வாளர்கள் படைவீரர்கள் வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் சோழ மன்னன் நிறுத்தி வைத்திருந்ததால் அவ்வாறு வலப்புறம் இடப்புறம் நின்றவர்களே வலங்கை இடங்கைப் பிரிவினர் என்றும் கருதுவர். எனவே சோழர் காலத்தில் தம் இனத்தைக் காப்பதற்காகப் பல இனத்தவர்கள் ஒன்றாகக் கூடி உருவாக்கிய அமைப்பே இவ்வலங்கை இடங்கைப் பிரிவு என்பது தெளிவாகின்றது. மூன்றாம் குலோத்துங்கனே இவ்வமைப்பிற்கு ஆதரவு வழங்கியிருக்க வேண்டும். ஆரம்பத்தில் குறைவான சாதிகள் கொண்டு துவக்கப்பட்ட இவ்வமைப்பில் காலப்போக்கில் பல இனங்கள் ஒன்றிணைந்து மாபெரும் அமைப்பாக மாறியது.

### வலங்கை இடங்கைப்பிரிவின் அமைப்பு:

சோழர் காலத்தில் தோன்றிய இவ்வமைப்பானது விரைவில் தமிழ்நாடு முழுவதும் பரவியது (ARE.No:419/1905). நாடு முழுவதும் இதன் ஆதிக்கம் ஓங்கியது. வலங்கைப் பிரிவில் 98 சாதிகளும் இடங்கைப்பிரிவில் 98 சாதிகளும் இணைந்தன (ARE. No:34/1913). வலங்கைசாதியில் வேளாளர், அகமுடையார், யாதவர், கைக்கோளர், வன்னியர், தேவேந்திரகுலவேளாளர், நாவிதர், வாணியர் போன்ற இனத்தவர் காணப்பட்டனர். இடங்கைப் பிரிவில் ஆசாரி, தட்டார், கொல்லர், சிற்பி, கோமுட்டி போன்ற இனத்தவரும் காணப்பட்டனர். இவ்வமைப்பில் காலப் போக்கில் பல புதிய சாதிகள் இணைந்தன. வலங்கை இடங்கைப் பிரிவினருக்கு உரிய விதிமுறைகளை அரசர்களே வகுத்து அளித்தனர். சான்றாகப் பெரியகுளம் தென்கரையில் ஜடாவர்மன் ஸ்ரீ வல்லபன் (கி.பி.1132-1163) என்ற பாண்டிய மன்னன் அவர்களுக்கான விதிமுறைகளை வகுத்தளித்தான். இப்பிரிவினர் காலப்போக்கில் தமக்கெனக் கோயில் வழிபாட்டு முறையையும் ஏற்படுத்திக் கொண்டனர். அத்துடன் தமக்கெனச் சின்னங்களையும் வாத்தியங்களையும் வைத்துக் கொள்ளும் உரிமையையும் அரசிடமிருந்து பெற்றுக்கொண்டனர் (ARE.No:34/1913). படைகளிலும் வலங்கைப்பிரிவு, இடங்கைப்பிரிவு என்ற அமைப்புகள் காணப்பட்டன. ஆடல் மகளிரான தேவரடியார்களில் கூட வலங்கை இடங்கைப் பாகுபாடு காணப்பட்டது. ஒரு பிரிவினர் இன்னொரு பிரிவினருடன் கூடாமல் பிரிந்து வாழ்ந்து வந்தனர் (ARE. No:489/1912). இவ்விரு பிரிவினரும் ஒருவருக்கொருவர் பகைமை பாராட்டினர். வலங்கைப் பிரிவில் வேளாண் சார்ந்த தொழில் முனைவோரே இடம் பெற்றிருந்தனர். இவர்கள் பெரும்பாலும் தமிழர்கள் ஆவர். இவ்வமைப்புக்கு வேளாளர்களே தலைமை தாங்கினர். இடங்கைப் பிரிவில் வணிகர்கள் மற்றும் கைவினைஞர்கள் இடம் பெற்றிருந்தனர். இதில் தமிழரைத்தவிர கோமுட்டிகள், அருந்ததியர் போன்ற இன்ன பிறபுலம் பெயர்ந்து வந்த இனத்தவரும் இடம் பெற்றனர். இப்பிரிவுக்குக் விஸ்வ பிராமணர் (கம்மாளர்) தலைமை தாங்கினர். அக்காலத்தில் அந்தணர்களுக்கு அடுத்துக் இவர்களே தமிழ்ச் சமூகத்தில் உயர்நிலை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. சோழ, பாண்டிய மன்னர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தமிழகத்தில் பெரும்பாலும் பாளையக்காரர்களான அந்நியர் ஆட்சியே இடம்பெற்றதால் இந்த இடங்கைப் பிரிவினர் அரசின் ஆதரவு பெற்றுச் செல்வாக்குடன் திகழ்ந்தனர். இதனாலே இவ்விரு பிரிவினரிடையே பூசல்கள் தோன்றின. இடங்கை வலங்கைப் பிரிவின் அபரிவிதமான வளர்ச்சியின் காரணமாய் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் தம் பெயருடன்

இப்பிரிவின் பெயரைப் பெருமையுடன் சேர்த்துக் கொண்டனர். சான்றாக,

1. பக்கல நாட்டு ஜனநாத தெரிஞ்ச வலங்கைடே வளைக்காரர்
2. சத்திரிய மல்ல தெரிச்ச வலங்கை வேளைக்காரர்
3. நித்த விநோதத் தெரிஞ்ச வேளைக்காரர்
4. சிறுதனத்து எதிரிலிச் சோழத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காரர்
5. சிறுதனத்து இளையராச உத்தம சோழத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காரர்
6. சிறுதனத்து சோழ சிகாமணி தெரிஞ்ச வலங்கை வேளைக்காரர்

போன்ற வலங்கைப் பிரிவினரின் பெயர்களைக் கல்வெட்டுகள் உரைக்கின்றன.

## வலங்கை இடங்கை படைப் பிரிவுகள்

அரசரின் படைப்பிரிவிலும் வலங்கை இடங்கைப் பிரிவுகள் காணப்பட்டன. இது வலங்கை மகாசேனை என்று அழைக்கப்பட்டது. படையில் வலங்கைப் பிரிவினரே அதிக அளவில் காணப்பட்டனர் (ARE. No:34/1913). சோழ நாட்டில் காணப்பட்ட இவ்வகை வேளைக்காரப் படையினர் கீழ்வருமாறு:

1. இராஜராஜத் தெரிஞ்சவலங்கை வேளைக்காரப்படை
2. அரிதுக்க லங்கணவலங்கை வேளைக்காரப்படை
3. இரண்முக ராமத்தெரிஞ்ச வேலைக்காரப்படை
4. இரஜை கண்டிவத் தெரிஞ்ச வேளைக்காரப் படை
5. சத்ரு புஜங்க தெரிஞ்ச வலங்கை வேளைக் காரப்படை
6. அழகிய சோழத் தெரிஞ்ச வேலைக் காரப்படை
7. சத்திரிய சிகா மணி வலங்கை வேலைக்காரப் படை
8. உத்தாண்ட தெரிஞ்சவலங்கை வேலைக் காரப்படை
9. ஜனநாத தெரிஞ்சவலங்கை வேளைக்காரப்படை

இப்படை பிரிவினருக்கு அரசினர் பதிணென் பூமி என்ற நிலத்தைக் கொடையாக வழங்கிச் சிறப்பித்தனர் (அகீஉ.மீணி:216/1917). இதேபோன்று இடங்கைப் பிரிவிலும் படைவீரர்கள் காணப்பட்டனர். ஆனால் அவர்கள் அதிக அளவில் இல்லை. சான்றாக இலங்கையில் சிங்கள வேந்தன் பொலனருவாவில் புத்தர் கோயிலைக் கட்டி அதில் புத்தரின் புனிதப் பல்லை வைத்து வழிபட்டபோது அக்கோயிலுக்கு மூன்று கை திருவேளைக்காரன் தலதாயப் பெரும்பள்ளி என்று பெயர்சூட்டி இடங்கை வேலைக்காரப் படையினரைத் தமிழகத்திலிருந்து வரவழைத்து அதற்குக் காவலாக வைத்தான் (ARE.No:31/1937). இவற்றால் இவ்வகை வேளைக்காரப் படையின் சிறப்பு வெளிநாடுகளிலும் பரவியிருந்ததை உணரலாம்.

## வலங்கை இடங்கைப்பிரிவினரின் போராட்டங்கள்

வருணாசிரம முறைக்கு எதிராகத் தோன்றிய இப்பிரிவினர் காலப்போக்கில் தமக்குள் மோதிக் கொண்டனர். தமிழ்நாடு முழுவதும் வலங்கைஇடங்கை பிரிவினரிடையே மோதல்கள் நிகழ்ந்ததாகச் சான்றுகள் கிடைத்துள்ளன. இம்மோதல்கள் கொலை, கொள்ளையில் முடிந்தன. சான்றாக முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் நித்த வினோத வளநாட்டு காந்தார நாட்டு இராசேந்திரச் சதுர்வேதிமங்கலத்தில் இவ்விரு பிரிவினருக்கும் இடையே மோதல் வெடித்தது. பின்னர் அது பெரும் கலகமாக மாறி அக்கிராமமே எரிக்கப்பட்டது. அங்குள்ள கோயிலும் கொள்ளை போனது (SII.Vol:7,No:976). இவ்வாறு மோதல் ஏற்பட முக்கியக்காரணம் இடங்கை பிரிவினர் மீது விதிக்கப்பட்ட வரிகளேயாகும். அதிகப்படியாக இடங்கைப்

*பிரிவினர் மீது கீழ்க்கண்ட வரிகள் விதிக்கப்பட்டன:*

1. *நிகரிலிச் சோழ மண்டல எழுபத்தெட்டு நாட்டுவரி*
2. *ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து நாற்பத்தெண்ணாயிரப் பூமிவரி*
3. *இராசேந்திர சோழப் பதிணெண் பூமிவரி*

மேலும் இப்பிரிவினர் வைத்திருந்த பசு, எருது முதலிய கால்நடைகள் மீதும் வரி விதிக்கப்பட்டது. இதை எதிர்த்துப் பெரும் போராட்டம் தோன்றியது. சான்றாக மூவேந்த வேளாண் என்ற குறுநில மன்னன் விதித்த இவ்வகை வரியை இடங்கைப் பிரிவினர் எதிர்த்ததைக் கூறலாம். இதுதவிர வலங்கைப் பிரிவில் உள்ள கைக்கோளர்கள் முதலாம் குலோத்துங்க சோழன் ஆட்சிக் காலத்தில் தம் மீது விதிக்கப்பட்ட நூல் வரியை எதிர்த்துக் கலகம் செய்தனர். தவிர வலங்கை இடங்கை மகன்மை என்ற வரி இவ்விரு பிரிவினர் மீதும் விதிக்கப்பட்டது. இதை எதிர்த்து இவ்விரு பிரிவினரும் இணைந்து போராடினர். சான்றாகக் கொருக்கையில் அரசுக்கு எதிராக இவ்விரு பிரிவினரும் இணைந்துபோராடியதைக்கொள்ளலாம். இவ்வாறு விதிக்கப்பட்ட அதிகப்படியான வரியைக் கண்ட இவ்விரு பிரிவினரும் ஒன்றாக இணைந்து போராட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானார்கள். சான்றாக ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் திருப்புகலூரில் வலங்கை இடங்கைப் பிரிவினர் ஒன்றுகூடி ஓர் உடன் படிக்கை ஏற்படுத்திக் கொண்டனர் (ARE. No: 84/1927 & 28). தமக்குள் உள்ள வேற்றுமையை மறந்து ஒற்றுமையுடன் வாழ இவ்விரு பிரிவினரும் தீர்மானித்தனர். இது தவிர ஆடுதுறை அடுத்துள்ள வழுதுவம் பட்டு, ஊசவாடி போன்ற இடங்களில் இப்பிரிவினர் சேர்ந்து இராசகரம் மற்றும் ஆலயவரியை எதிர்த்துப் போராடினர்.

சில சமயம் இவ்விரு பிரிவினர் செலுத்திய வரியை அரசு ஊழியர்கள் கொள்ளையடித்தனர். எனவே அவர்களை எதிர்த்தும் இவர்கள் போராட வேண்டியவரானார்கள். சான்றாக விருதாச்சலத்தில் தமது வரியை வேளாளரும் பிராமணரும் அரசு ஊழியரும் கையாடியதைக் கண்டு பொங்கி எழுந்த இவ்விரு பிரிவினரும் ஒன்றுகூடி அந்த இரு இனத்தவருக்கும் குடியிருப்பு வசதி செய்து தரக்கூடாது, அவர்களுக்குக் கணக்கெழுதக்கூடாது, அவர்களின் திட்டங்களுக்கு உதவக்கூடாது, தம்ஊர் சபை அறிவித்த வரிகளைத்தவிரப் பிற வரி அளிக்கக்கூடாது என்று தீர்மானித்தனர் (ARE.No:113/1919). வணிகர் அதிகமுள்ள இடங்கைப் பிரிவினர் தம்மீது விதிக்கப்பட்ட சுங்கவரியை எதிர்த்தும் கலகம் செய்தனர் (ARE.No:538/1913). இதன் விளைவாய் முதலாம் குலோத்துங்க சோழன் சுங்கவரியை நீக்கினான். இதனால் அவன் சுங்கம் தவிர்த்த சோழன் என்று அழைக்கப்பட்டான். காலப் போக்கில் இவ்விரு பிரிவினரும் தமது பாதுகாப்பிற்காகவும் வளர்ச்சிக்காகவும் தமக்குள் இருந்த பிணக்குகளை மறந்து ஒன்றாக இணைந்து செயல்பட வேண்டியவரானார்கள். சான்றாக ஊற்றத்தூர் கோயிலில் இடங்கைப் பிரிவினர் ஒன்றாகக்கூடிக் கீழ்க்கண்ட தீர்மானத்தைத் தமக்குள் செய்து கொண்டனர்:

இனி இடங்கைப் பிரிவினில் தொண்ணூற்று எட்டுச் சாதியரும் தமக்குள் வேற்றுமையை வளர்க்கக்கூடாது. ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகளாக வாழவேண்டும். தமக்குள் ஒருவருக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்தால் அனைவரும் ஒன்றிணைந்து போராட வேண்டும். தாம் நடந்து செல்லும்போது தமக்கு முன் குடைபிடித்தல், சங்கு, கொம்பு, குழல் போன்ற வாத்தியங்களை ஊதிக் கொள்ள வேண்டும். தமது அடையாளமான நாரையின் இறகு தொங்கும் தலைமுடியைத் தலையில் வைத்துக்கொள்ள வேண்டும். இதை மீறுபவர்கள் சாதியிலிருந்து

தள்ளிவைக்கப்படுவார்கள். தம்எதிரிகளின் அடிமையாகவும் கருதப்படுவார்கள் (ARE. No:231/1932 & 33). இவ்விரு பிரிவினரும் ஒற்றுமையுடன் செயல்பட்டு அரசுக்கு எதிராகப் போராடி வெற்றியும் பெற்றனர். இப்பிரிவினர் பல்வேறு தானங்களை வழங்கிப் பொதுத்தொண்டு புரிந்தனர். சான்றாக மேல்சேவூர் ரிஷபேஸ்வரர் கோயிலில் முதலாம் இராஜ ராஜன் காலத்தில் வலங்கைப் பிரிவினர் உமாதேவி சிலையை நிறுவினர் (ARE.No:269/1917). குத்தாலம் காவிரி நல்லூரில் இப்பிரிவினர் வீர நாராயணன் குட்டத்தாழி சென்னவாரறிவார் கோயில் நடுஜாமப் பூசைக்கு 360 கழஞ்சு பொன்னைத் தானமாக வழங்கினர் (SII. Vol:8, No:155). இதுபோன்று சமயத் தொண்டுகள் புரிந்து இவர்கள் பொது மக்களிடம் பாராட்டு பெற்றனர்.

### வலங்கை இடங்கைப் பிரிவின் மறைவு

தமிழ்ச்சமுதாயத்தில் 12 ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றிய இவ்வலங்கை இடங்கைப் பிரிவு பல நூற்றாண்டுகள் நீடித்தது. இப்பிரிவு தமிழ்ச் சமுதாயத்தையே ஆட்டிப்படைத்தது. சோழ, பாண்டிய மன்னர்கள் வீழ்ச்சிக்குப் பின் தமிழகத்தை ஆண்ட தெலுங்கு நாயக்க மன்னர்களின் ஆட்சியில் இம்முறை நன்கு வளர்ந்தது. இதன்ஆதிக்கம் அப்பொழுது உச்சநிலையை எட்டியது. இதன் விளைவாய்த் தமிழ்ச் சமுதாயம் இரண்டாகப் பிளவுபட்டது. இதை நன்கு உணர்ந்த ஆட்சியாளர்கள் இம்முறையைத் தந்திரமாகப் போற்றி வளர்த்துத் தம்மைப் பாதுகாத்துக்கொண்டனர். இவ்வாறு பல நூற்றாண்டுக் காலம் தொடர்ந்து நீடித்த இம்முறை தமிழ்ச் சமூகத்தையே சீரழித்தது. இவ்விரு பிரிவினரிடையே பூசல்கள் தொடர்கதையானது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கூட இப்பிரிவினரின் மோதல்கள் நீடித்து, வழக்கு நீதிமன்றம் வரை சென்றது. இம்மோதல்களால் சாலைகளில் இரத்தம் சிந்தியது.

இறுதியாக 1809 ஜீன் 10 அன்று செங்கல்பட்டு நீதிபதி ஜார்ஜ் போல் மென்துரை இவ்விரு பிரிவினரின் வழக்கையும் நன்கு விசாரித்து இறுதித் தீர்ப்பு வழங்கினார். இவர்களின் விருதுகள், அடையாளங்கள் பற்றி விரிவாக வரையறை செய்து தெளிவான தீர்ப்பு வழங்கினார். இதனால் அவர்களுக்கிடையே மோதல்கள் தற்காலிகமாக நின்றன. ஆனால் இம்முறை தொடர்ந்து நீடிக்காமல் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் திடீரென்று மறைந்துபோனது. ஆங்கிலேயர் ஆட்சியில் இம்முறை ஒரு முடிவுக்கு வந்தது. யாரும் எதிர்பாராவண்ணம் இம்முறை சுவடு தெரியாமல் மறைந்துபோனது வியப்புக்குரியது. அவ்வளவு பெரிய அமைப்பு திடீரென்று எதனால் திடீரென்று மறைந்ததென்று விளங்கவில்லை. எத்தகு சூழலில் அது மறைந்தது என்றுகூட விளங்கவில்லை. அதன் தோற்றம் போன்றே அதன் திடீர்மறைவும் தமிழக வரலாற்றில் பெரும்புதிராக உள்ளது.

### முடிவுரை

சாதி முறையின் ஒரு வடிவமே வலங்கை இடங்கைப் பிரிவாகும். இந்த முறையின் விளைவால் தமிழ்ச் சமுதாயம் இரண்டாகப் பிரிந்து கிடந்தது. இதை நன்கு பயன்படுத்திக் கொண்ட அந்நிய ஆட்சியாளர்கள் இதை நன்றாக வளர்த்துத் தமிழர்கள் ஒன்றிணையாமல் பார்த்துக் கொண்டனர். பழந்தமிழ் சமுதாயத்தின் பல நிலையிலும் ஆதிக்கம் செலுத்திவந்த அந்தணர்கள் ஆதிக்கத்திற்கு எதிராகப் பிற தமிழ் இனத்தவர்கள் ஏற்படுத்திக்கொண்ட கூட்டமைப்பே இப்பிரிவாகும். ஆனால் யாரை எதிர்க்க இப்பிரிவு ஏற்படுத்தப்பட்டதோ அவ்வந்தணர்களும் காலப்போக்கில் இப்பிரிவில் இணைந்தது வியப்புக்குரியது. இவ்வமைப்பு முறையின் விளைவாய்ப் பல நூற்றாண்டுகள் சமூகத்தில் சாதிமுறை இறுகிக் காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாய் ஏராளமான போராட்டங்கள் தோன்றி இரத்தம் சிந்தப்பட்டது. அரசு விதித்த பல்வகை அநீதியான வரிகளை

இப்பிரிவுகள் ஒன்றிணைந்து போராடி நீக்கச்செய்து வெற்றியும் கண்டனர். இதைத் தவிர இப்பிரிவினரால் தமிழ்ச் சமுதாயத்துக்குப் பெரிய நன்மை ஏதும் விளைந்து விடவில்லை. இப்பிரிவால் நிறைவைவிடக் குறைகளே அதிகம் காணப்பட்டன. இப்பிரிவினால் தமிழ் சமுதாயம் கண்ட பலன் ஏதுமில்லை. தமிழக வரலாற்றில் சாதிமுறையின் இருப்பை இந்த வலங்கை இடங்கைப் பிரிவுகள் அழுத்தம்திருத்தமாகப்பதிவு செய்து விட்டுச் சென்றுள்ளன.

### சுருக்கம்

1. ARE-Annual Report on Indian Epigraphy
2. SII-South Indian Inscription

### பார்வைநூற்பட்டியல்

1. பிள்ளை, கே.கே. (1969), தமிழர்களின் சமூக வரலாறு, மெட்ராஸ் பல்கலைக்கழகம், சென்னை.
2. சுவாமிநாதன்.ஏ, (1991), தமிழகத்தின் சமூக மற்றும் கலாச்சார வரலாறு, தீபா பப்ளிகேஷன்ஸ், சென்னை.
3. நீலகண்டசாஸ்திரி, கே.ஏ. (1935), சோழர்கள், மெட்ராஸ் பல்கலைக்கழகம், சென்னை.
4. சௌந்தரபாண்டியன். எஸ், (1995), இடங்கை வலங்கையர் வரலாறு, தமிழ்நாடு தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு, சென்னை.
5. வானமாமலை. நா, (1999), தமிழ் நாட்டில் சாதி சமத்துவப் போராட்டக் கருத்துகள், மக்கள் வெளியீடு, சென்னை.
6. பிள்ளை. கே.கே, (2013), தமிழக வரலாறு மக்களும் பண்பாடு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
7. பால சுப்பிரமணியன். மா, (1978), சோழர்களின் அரசியல், கலாச்சார வரலாறு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.
8. நீலகண்ட சாஸ்திரி. க.அ. (1979), தென்னிந்திய வரலாறு, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.